

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பெருநகர் கிராமத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் வரவேற்றார். பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் ஜி. செல்வம் எம்.பி. , தரணி வேந்தன் எம்.பி. சி.வி.எம்.பி. எழிலரசன், பாரிவள்ளல், சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்தி குமார், பத்மா, இளமதி கோவிந்தராஜன் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், நிர்வாகிகள், பொதுமக்கள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!

# சைதை மேற்கு பகுதிக் கழக அவசர ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வேண்டுகோள்!

சென்னை, ஏப்.13-

சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக்கூட்டம் குறித்து பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதியில் பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், ஆகியோர் முன்னிலையில் இன்று (13.04.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் சைதாப்பேட்டை, பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதிக்குட்ப்பட்ட வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள், ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

### நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை! ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு!

# மதுரவாயல் 147வது வட்டத்தில் 3 இடங்களில் நீர் மோர் பந்தல் திறப்பு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்! வட்டச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஏப். 13

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டுக்கு உட்பட்ட ஆலப்பாக்கத்தில் மாவட்டப் பிரதிநிதி க.பிருந்தாவனம், இலக்கிய அணி அமைப்பாளர் உதயம் இ.வேணு, பகுதி தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் எம்.ரவிக்குமார், அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.ஜெயக்குமார், ஜி.முனுசாமி, விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.கோகுலகிருஷ்ணன் ஏற்பாட்டில் தந்தை பெரியார் பூங்கா, அருகில் வட்டத் துணைச் செயலாளர் ஜி.பி.ஆனந்தகுமார் ஏற்பாட்டில் திடீர் நகர் பெருமாள் கோவில் அருகில் மற்றும் மதுரவாயல் வடக்கு பகுதி மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஜி.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் கங்கா நகர், ஆட்டோ நிறுத்தம் ஆகிய மூன்று இடங்களில் இன்று (13.04.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, பொதுமக்களின் தாகம் தீர்த்திட நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமை வகிக்கிறார்.

வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைக்கிறார்.

இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கலந்து கொள்ள உள்ளதால் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மகளிர் அணியினர் மற்றும் பொது மக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் வாலாஜாபாத்தில் சித்த மருத்துவமனை கட்டிடம் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி.டபுள்யூ இ.எஸ். இல்லாமல்லி ஸ்ரீதர் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் பி.சேகர், ஆர்.கே.தேவேந்திரன், என்.பாண்டியன், கே.தியாகராஜன், செயல் அலுவலர் திருமதி. மாலா, சித்த மருத்துவர் திருமதி. கலைவாணி, டி.சஞ்சய் காந்தி, ஏ.வி.சுரேஷ்குமார், டபிள்யூ.இ.எஸ். சுகுமாரன் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## நிர்வாகிகளின் சமூக வலைத்தளப் பணிகளை ஒருங்கிணைக்கவும், பயிற்சியளிக்கவும் கழக மாவட்டத்துக்கு ஒரு துணை அமைப்பாளர் தேர்வு

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் தலைமைக் கழக ஒப்புதலுடன் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைத்தளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைத்தளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இப்பொறுப்புக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் வரும் 30–ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**விதிமுறைகள்**

- 18–35 வயதுக்கு உட்பட்டவராகவும் சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து இயங்குபவராகவும் இருக்க வேண்டும்.
- மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தும் விண்ணப்பிக்கலாம். மாவட்ட அலுவலகம், அமைப்பாளர் மற்றும் அன்பகத்திலிருந்தும் விண்ணப்ப நகல் பெற்று விண்ணப்பிக்கலாம்.
- பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் நகல் இணைப்பது அவசியம்.
- எக்ஸ் தளம், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளக் கணக்கு விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கழகப் பணி குறித்த ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாம்.
- நேர்காணல் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**ஆன் லைனில் விண்ணப்பிக்க : bit.ly/DMKYW_SM**

இந்த அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ள QR code–ஐ ஸ்கேன் செய்தும் தங்களுடைய விவரங்களை நிரப்பி, இப்பொறுப்புக்கு விண்ணப்பிக்கலாம். சமூக வலைத்தளக் கணக்குகளுக்கான இணைப்புகளை (Links) கேட்கப்பட்டுள்ள வடிவத்தில் (Format) நிரப்ப வேண்டும்.

விண்ணப்பத்தை முழுமையாக நிரப்பி, அனைத்து விவரங்களையும் சரிப்பார்த்த பிறகே, சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



## தி.மு.க. இளைஞர் அணி

மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கான சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ..............................................

சட்டமன்றத் தொகுதி : ..............................................

பெயர் : ..............................................

தந்தை பெயர் : ..............................................

பிறந்த தேதி : .............................. வயது..............................

கல்வித் தகுதி : ..............................................

முகவரி : ..............................................

..............................................

.............................................. PIN: ..............................

தொழில் : ..............................................

Facebook Profile Link : ..............................................

X(Twitter) Profile Link : ..............................................

Instagram Profile Link : ..............................................

வாட்ஸ்–அப் எண் : ..............................................

மின்னஞ்சல் முகவரி : ..............................................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும்விதமாக பூர்த்தி செய்யவேண்டும்.
2) புகைப்படம் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-04-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி